பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

30 09 2025 7 15

செவ்வாய்க்கிழமை காலை

ஆகாஷவாணி

செய்திகள்-வாசிப்பவர் - மிருதுளா

தலைப்புச் செய்திகள்

1. உள்நாட்டு உற்பத்திப் பொருட்களை மக்கள் அதிக அளவில் பயன்படுத்த வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

2. நதிகள் பாதுகாப்பு, ஈர நிலங்கள் மேம்பாடு மற்றும் மாசு குறைப்பிற்கு மத்திய அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாக நீர்வளத்துறை அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல் கூறியுள்ளார்.

3. நாட்டில் கடந்த சில ஆண்டுகளில் கால்நடைத்துறையின் ஆண்டு வளர்ச்சி 12 சதவீதமாக அதிகரித்துள்ளது என்று மத்திய கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் கூறியுள்ளார்.

4. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு கஷ்மீரில் பாகிஸ்தான் அரசுக்கு எதிரான மக்களின் போராட்டம் தீவிரமடைந்துள்ளது.

5. இந்தியாவுக்கு எதிரான 19 வயதுக்குட்பட்டோருக்கான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியா முதலில் பேட் செய்து வருகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

உள்நாட்டு உற்பத்திப் பொருட்களை மக்கள் அதிக அளவில் பயன்படுத்த வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதில்லியில் பிஜேபி அலுவலகத்தை நேற்று அவர் திறந்து வைத்தார்.

வருமான வரி உச்சவரம்பு உயர்த்தப்பட்டுள்ளதன் மூலம் சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் மூலமும் நாட்டு மக்கள் ஒவ்வொரு ஆண்டும் இரண்டரை லட்சம் கோடி ரூபாயை சேமிக்க முடியும் என்று அவர் தெரிவித்தார்.

ஊழலுக்கு எதிரான போராட்டத்தில் அரசு உறுதியுடன் உள்ளதாகவும் அவர் கூறினார்.

நாட்டு மக்களின் பாதுகாப்புக்கு அரசு உயர் முன்னுரிமை அளிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை நோக்கி அரசுடன் பிஜேபி கட்சியினரும் இணைந்து செயல்பட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

தில்லி நகரை மேம்படுத்த அரசுடன் பிஜேபி தொண்டர்கள் ஒத்துழைத்து செயல்பட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

தில்லியில் திருமதி ரேகா குப்தா தலைமையிலான அரசு வீட்டு வசதி, சுகாதாரம், சுற்றுச்சூழல் மேம்பாடு உள்ளிட்டவற்றில் மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் திரு. நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்தார்.

<<<<>>>>

நதிகள் பாதுகாப்பு, ஈர நிலங்கள் மேம்பாடு மற்றும் மாசு குறைப்பிற்கு மத்திய அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாக நீர்வளத்துறை அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல் கூறியுள்ளார்.

தில்லியில் கங்கை நதியை தூய்மைப்படுத்துவது தொடர்பான உயர்நிலைக் குழுவின் 16வது கூட்டத்தில் பேசிய அவர், கங்கை நதியை பாதுகாப்பது வெறும் சுற்றுச்சூழல் முயற்சி மட்டுமல்ல என்று கூறினார்.

இது நாட்டின் கலாச்சாரம், பாரம்பரியம், நம்பிக்கை ஆகியவற்றுடன் இணைந்த அம்சம் என்று அவர் தெரிவித்தார்.

ஈர நிலங்களைப் பொறுத்தவரை உத்தரப்பிரதேசத்தில் 40 இடங்களும், பீஹாரில் 19 இடங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இவற்றை மேம்படுத்தி உரிய அங்கீகாரத்தைப் பெற நடவடிக்கை எடுக்குமாறு இம்மாநில அரசுகள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஈர நிலங்களை மேம்படுத்துவதன் மூலம் வெள்ளத்தைக் கட்டுப்படுத்தி நிலத்தடி நீர் இருப்பை மேம்படுத்த முடியும் என்று அவர் தெரிவித்தார்.

இதன் மூலம் பல்லுயிர்ப் பாதுகாப்பையும் உறுதி செய்ய முடியும் என்று திரு. சி.ஆர். பாட்டீல் கூறினார்.

<<<<>>>>

நாட்டில் கடந்த சில ஆண்டுகளில் கால்நடைத்துறையின் ஆண்டு வளர்ச்சி 12 சதவீதமாக அதிகரித்துள்ளது என்று மத்திய கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் கூறியுள்ளார்.

இத்தாலியின் ரோமில் நடைபெற்ற கால்நடைகள் மேம்பாடு தொடர்பான உலகளாவிய மாநாட்டில் பேசிய அவர், இந்தியாவில் கால்நடை விவசாயிகளின் நலனுக்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வை கொண்ட நடவடிக்கைகளால் இத்துறை தொடர்ந்து மேம்பட்டு வருவதாக அவர் கூறினார்.

தேசிய கால்நடை இயக்கத்தால் 5 கோடியே 60 லட்சம் விவசாயிகளும், 9 கோடி கால்நடைகளும் பயனடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் கால்நடைகளுக்கு 120 கோடி டோஸ் தடுப்பூசிகள் போடப்படுவதாகவும், இது உலகின் மிகப்பெரிய கால்நடை தடுப்பூசி இயக்கம் என்றும் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

விமானப் பயணிகளின் பயணத்தை எளிதாக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக சிவில் விமானப் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

விஜயவாடா சர்வதேச விமான நிலையத்தில் Udan Yatri Cafe எனப்படும் உணவத்தை நேற்று அவர் திறந்து வைத்தார்.

சென்னை, கொல்கத்தா உள்ளிட்ட நகரங்களுக்குப் பிறகு ஏழாவதாக விஜயவாடாவில் இந்த உணவகம் திறக்கப்பட்டுள்ளது என்றும், இங்கு குறைந்த விலையில் உணவுகள் கிடைக்கும் என்றும் அவர் கூறினார்.

படிப்படியாக பல்வேறு விமான நிலையங்களிலும் இது அமைக்கப்படும் என்றும் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்தார்.

<<<<>>>>

வளர்ச்சியடைந்த நாடுகள் இந்தியாவுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ள தயாராக இருப்பதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

கிரேட்டர் நொய்டாவில் நடைபெற்ற சர்வதேச வர்த்தக மாநாட்டு நிகழ்ச்சியில் நேற்று நிறைவுரையாற்றிய அவர், ஐக்கிய அரபு எமிரேட், ஆஸ்திரேலியா, பிரிட்டன் நாடுகள் இந்தியாவுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

ஐஸ்லாந்து, நார்வே, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளுடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் நாளை முதல் அமலுக்கு வரும் என்றும், நியூசிலாந்து, ஓமன் உள்ளிட்ட சில நாடுகளுடன் இந்த ஒப்பந்தத்தை மேற்கொள்ள பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் அந்நிய செலாவணி இருப்பு 700 பில்லியன் டாலர்களை எட்டியிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தத்தின் தாக்கம் அடுத்த பத்தாண்டுகளுக்கு தொடரும் என்றும் அவர் கூறினார்.

அடுத்த இரண்டாண்டுகளில் நாட்டின் பொருளாதாரம் ஐந்து ட்ரில்லியன் டாலரை எட்டும் என்று திரு பியூஷ் கோயல் தெரிவித்தார்.

<<<<>>>>

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்களால் வணிகம் அதிகரிக்கும் என்று தூத்துக்குடியைச் சேர்ந்த இந்திய வர்த்தக சங்கத்தினர் தெரிவித்தனர்.

எமது செய்தியாளரிடம் பேசிய அந்த சங்கத்தின் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

இதனால் அனைத்து தொழில்களும் வளர்வதுடன், மக்கள் பெரிதும் பயனடைவார்கள் என்று இந்த சங்கத்தின் செயலாளர் திரு. பொன் வெங்கடேஷ் எமது செய்தியாளரிடம் கூறினார்.

<<<<>>>>

மத்திய அரசின் சாகர் மாலா திட்டத்தின்கீழ் கடலூர் துறைமுகத்தை மேம்படுத்தி 37 ஆண்டுகளுக்குப் பிறகு அதை இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநில பொதுப்பணி மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு கூறியுள்ளார்.

சென்னையில் நடைபெற்ற கடல்சார் வாரியக் கூட்டத்தில் பேசிய அவர், மாநிலத்தின் சிறு துறைமுகங்களில் 12 மில்லியன் சரக்குகள் கையாளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு கஷ்மீரில் பாகிஸ்தான் அரசுக்கு எதிரான மக்களின் போராட்டம் தீவிரமடைந்துள்ளது.

மருத்துவம், கல்வி, உள்கட்டமைப்பு போன்ற அடிப்படை வசதிகளையும், உரிமைகளையும் கோரி மக்கள் நேற்று போராட்டங்களில் ஈடுபட்டனர்.

அப்போது காவல்துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்தனர். 22 பேர் காயமடைந்தனர்.

பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாஃப் அமைப்பு இந்த போராட்டங்களை நடத்தியது.

<<<<>>>>

எண்ணெய் நிறுவனங்களுக்கு இடையேயான 5வது சீனியர் மகளிர் ஹாக்கிப் போட்டியை புதுதில்லியில் மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி நேற்று தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், நாட்டில் விளையாட்டுகளை ஊக்குவிப்பதில் எண்ணெய் நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக தெரிவித்தார்.

விளையாட்டுகளில் மகளிரின் பங்களிப்பையும் இந்த நிறுவனங்கள் ஊக்குவித்து வருவதாக திரு. ஹர்தீப் சிங் புரி கூறினார்.

<<<<>>>>

இந்தியாவுக்கு எதிரான 19 வயதுக்குட்பட்டோருக்கான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பிரிஸ்பேனில் இன்று தொடங்கியது.

இதில் டாஸ் வென்ற ஆஸ்திரேலிய அணி முதலில் பேட் செய்து வருகிறது.

<<<<>>>>

ஐ.சி.சி. மகளிர் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

இதில் இந்தியா, ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, பங்களாதேஷ், நியூசிலாந்து, தென்னாப்பிரிக்கா, இலங்கை ஆகிய 8 அணிகள் பங்கேற்கின்றன.

குவஹாத்தி, மும்பை, விசாகப்பட்டினம் ஆகிய இடங்களில் நவம்பர் 2ஆம் தேதி வரை போட்டிகள் நடைபெற உள்ளன.

குவஹாத்தியில் இன்று நடைபெறும் முதலாவது ஆட்டத்தில் இந்தியா - இலங்கையை எதிர்கொள்கிறது.

இப்போட்டி மாலை 3 மணிக்கு தொடங்குகிறது.

<<<<>>>>

ப்ரோ கபடி லீக் போட்டியில் நேற்றைய ஆட்டத்தில் குஜராத் அணி - உத்தரப்பிரதேசத்தை வென்றது.

மற்றொரு ஆட்டத்தில் தில்லி அணி - ஹரியானா அணியை வென்றது.

இன்றைய ஆட்டங்களில் தெலுகு அணி - பட்னா அணியையும், பெங்கால் அணி – புனே அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<The End>>>>